# பிள்ளைகளுக்கான உதவி: பெற்றோர்களுக்கு தகவல்

18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தீங்கிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பிள்ளைகளுக்கான உதவி புரியும் சங்கம் (Children's aid society) அல்லது CAS சட்டப்படி கடமைப்பட்டுள்ளது. இந்த வேலையை அரசாங்கம் அவர்களுக்கு கொடுத்திருக்கிறது.

## ஒரு குடும்பத்தை CAS எப்பொழுது கவனிக்கும்?

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாதுகாப்பாக வைத்திருக்க சட்டப்படி கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒரு CAS பின்வரும் சம்பவங்கள் நடப்பதாக நம்பினால் அவர்கள் ஒரு குடும்பத்தை கவனிக்க கூடும்:

- பெற்றோர்கள் ஒருவருக்கொருவர் வன்முறையாக நடந்துகொள்ளல்,
- அவர்களின் பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய காரியங்களை பெற்றோர் செய்தல்,
- அவர்களின் பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய காரியங்களை அவர்களின் கணவன், மனைவி, அல்லது வேறு குடும்பத்து அங்கத்தவர்கள் உட்பட வேறு எவரும் செய்யும்பொழுது ஒரு பெற்றோர் அவர்களை தடுத்து நிறுத்தாவிடல்.

CAS ஒரு குடும்பத்தை கவனிப்பதற்கு வழிவகுக்கும் நிகழ்வுகளுக்கான உதாரணங்கள் சில:

- பிள்ளைகளை பரிகசித்தல் அல்லது உரத்த சத்தத்தில் ஏசுதல்,
- பிள்ளைகளை அடித்தல் அல்லது கட்டிப்போடுதல்,
- பிள்ளைகளை தண்டிப்பதற்காக அவர்களுக்கு உணவு கொடுக்காமல் விடுதல்,
- பிள்ளைகளை பாலியல் ரீதியாக தொடுதல், அல்லது
- அவர்களை பராமரிக்கக்கூடிய அளவு வயதுள்ள பராமரிக்கக்கூடிய ஒருவர் இல்லாமல் பிள்ளைகளை அவர்கள் பாட்டில் தனியே விடுதல்.

## ஒரு பிள்ளை பாதுகாப்பற்று இருக்கிறது என CAS எப்படி அறியக்கூடும்?

**16 வயதுக்குட்பட்ட** பிள்ளை ஒன்றுக்குத் தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளது அல்லது தீங்கு விளைவிக்கப்படலாம் என நம்புவதற்கு எவராவது ஒருவருக்கு தகுந்த காரணம் இருந்தால், அவர்கள் அதை CAS ஒன்றுக்குக் கூறவேண்டும். இது உறவினர், நண்பர்கள், மற்றும் அயலவர்களை உள்ளடக்கும். இது சில சமயங்களில் அறிவிக்க வேண்டிய கடமை என்று அழைக்கப்படுகிறது.

பிள்ளைகளுடன் பணிபுரிபவர்களுக்கும் கூட அறிவிக்க வேண்டிய கடமை உள்ளது. அல்லது காவற்படையினர் அவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தலாம். உதாரணமாக ஆசிரியர்கள், மருத்துவர்கள், தாதிமார், பிள்ளை பராமரிப்பு பணியாளர்கள், குடும்ப ஆலோசகர்கள், சமூக பணியாளர்கள், மற்றும் மதத் தலைவர்கள்.

உங்கள் வழக்கறிஞருக்கு மட்டுமே அறிவிக்க வேண்டிய கடமை எதுவும் **இல்லை**.

அந்தப் பிள்ளை 16 அல்லது 17 வயதுடையவராக இருந்தால், மக்கள் தங்கள் கரிசனைகளை CAS ஒன்றுக்கு அறிக்கையிடுவதெனத் தெரிவு செய்யலாம், ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவேண்டும் என்றில்லை.

## ஒரு CAS பணியாளர் என்னைத் தொடர்பு கொண்டால்?

இயலுமானளவில் சாந்தமாக இருக்க முயற்சி செய்யுங்கள். அதிகம் பேசுவற்கு முன் நீங்கள் ஒரு வழக்கறிஞருடன் பேச முயற்சிக்க வேண்டும். உங்களால் பணம் செலுத்த இயலாவிட்டால் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனம் (Legal Aid Ontario) வழக்கறிஞர் ஒருவருக்கு பணம் செலுத்தக் கூடும்.

பெரும்பாலான வேளைகளில், உங்களுடைய வீட்டிற்குள் நுழைவதற்கு CAS உங்களின் அனுமதியை பெறவேண்டும். வழமையாக அவர்களை வரவிடுவது உசிதம். இல்லாவிடில் நிலைமை மோசமாகக் கூடும். ஒரு பிள்ளையைப் பாதுகாப்பதற்காக, CAS வேண்டுமென்றால் பலாத்காரமாக நுழையமுடியும். உதவிக்கு அவர்கள் காவற்படையினரை அழைத்து வரலாம்.

ஆங்கிலம் பேச அல்லது விளங்க உங்களுக்கு **ஏதாவது** சிரமம் இருந்தால், CAS பணியாளருக்கு சொல்லவும். உங்களுடைய மொழியையும் ஆங்கிலத்தையும் நன்றாக பேசக்கூடிய ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியை கேட்கவும். CAS ஒருவரை கண்டுபிடிக்க முடியாவிடில், ஒரு மொழிபெயர்ப்பாளரை நீங்களாகவே கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்.

வழமையாக CAS பணியாளர் பெற்றோர்களுடனும் பிள்ளைகளுடனும் தனித்தனியாக பேசுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் பிள்ளைகள் அவர்களுக்கு சொல்லும் எதைப்பற்றியும் அவர்கள் குறிப்பெடுத்து வைக்க வேண்டும். இந்த விபரங்கள் நீதிமன்றத்தில் பிற்காலத்தில் பாவிக்கப்படலாம்.

பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கும் சில செயல்கள் குற்றமாகும். CAS அல்லது காவல் படையினர் உங்களை குற்றவாளியாக சந்தேகிக்கிறார்கள் என நீங்கள் நினைத்தால், அவர்களின் மேற்கொண்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கமுன் சட்ட ஆலோசனை பெறவிரும்புவதாக அவர்களுக்கு நீங்கள் சொல்லுங்கள். உடனடியாக வழக்கறிஞர் ஒருவரை தொடர்பு கொள்ளவும்.

➥ 2 வது பக்கத்தில் இன்னும் உள்ளது ➥

## CAS ஆல் என்ன செய்ய முடியும்?

பல விதமான காரியங்களை செய்யும்படி CAS உங்களுக்கு ஆலோசனை சொல்லலாம். அவர்கள் சொல்வதை நீங்கள் செய்ய சம்மதிக்கும்படி உங்களைக் கேட்கலாம். உங்களுடைய வழக்கறிஞரின் ஆலோசனையை பெறும் வரையும் CAS உடன் ஒரு பத்திரத்திலும் நீங்கள் கையொப்பம் இடவேண்டாம். CAS உடன் நீங்கள் ஒரு ஒப்பந்தத்தை செய்வதாக இருந்தாலும் வழக்கறிஞர் ஒருவரை அமர்த்துவது மிகவும் முக்கியம்.

சில சந்தர்ப்பங்களில், CAS உங்களுடைய பிள்ளையை உங்களிடம் இருந்து எடுத்துக் கொண்டு போகமுடியும். உங்களுடைய பிள்ளை 16 அல்லது 17 வயதுடையவராக இருந்தால், அந்தப் பிள்ளை சம்மதித்தால் மட்டுமே அவர்களால் இதைச் செய்யமுடியும்.

## CAS என்னுடைய பிள்ளையை எடுத்துக்கொண்டு போனால்?

உங்கள் குடும்ப அங்கத்தவர்களால் அல்லது உங்களுடைய சமூகத்தில் இருக்கும் வேறு பெரியவர்களால் உங்கள் பிள்ளையை பராமரிக்க முடியுமானால் இதைப்பற்றி CAS க்கு தெரியப்படுத்தவும். உறவினர் அல்லது சிநேகிதர்களுடன் தங்கியிருப்பதற்காக CAS உங்கள் பிள்ளையை கொண்டு செல்லாவிடில், சமூக முகவர் அல்லது அரசாங்கத்தால் பணம் கொடுக்கப்படும் குடும்பம் ஒன்று உங்கள் பிள்ளையை எடுத்து பராமரிப்பார்கள். உங்கள் பிள்ளையை சென்று பார்க்க சாதாரணமாக நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.

உங்கள் பிள்ளையை திரும்ப பெற உதவுவதற்கு வழக்கறிஞர் ஒருவரை உடனடியாக அமர்த்துங்கள். உங்கள் பிள்ளையை CAS எங்கு கொண்டு சென்றாலும், உறவினர் அல்லது சிநேகிதருடன் தங்கியிருக்கும்படி கொண்டு சென்றாலும் கூட நீங்கள் இதை செய்ய வேண்டும்.

## நீதிமன்றத்திற்கு நான் போக வேண்டுமா?

CAS உங்கள் பிள்ளையை எடுத்துக்கொண்டு போயிருந்தால் அல்லது அவர்களின் ஆலோசனையை பின்பற்றுமாறு உங்களை பணிக்கும்படி நீதிமன்றத்தை கேட்பதற்கு, இந்த வழக்கை CAS ஒரு குடும்ப நீதிமன்றத்திற்கு எடுத்து செல்ல வேண்டும். அவர்கள் ஒரு பிள்ளையை எடுத்துக்கொண்டு போயிருந்தால், முதலாவது நீதிமன்றத் திகதி அவர்கள் பிள்ளையை எடுத்துக்கொண்டு போன நாளில் இருந்து 5 நாட்களுக்குள் இருக்க வேண்டும்.

நீங்கள் நீதிமன்றத்திற்கு பல தடவை போகவேண்டி வரலாம். நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவிசெய்ய CAS வழக்குகளில் அனுபவமுள்ள வழக்கறிஞர் ஒருவரை அமர்த்தவும்.

காவற்படையினர் உங்களை குற்றம் சாட்டினால், குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை ஒன்றில் வாதாட உங்களுக்கு உரிமை உண்டு. ஒரே நிலைமையைப் பற்றி இருந்தாலும் கூட, குடும்ப நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் இருந்து இது வேறுபட்டது. குற்றவியல் வழக்கறிஞர் ஒருவரை உடனடியாக அமர்த்துங்கள். ⁂

**பொதுவான தகவல்களையே இந்தப் பக்கங்களில் நாம் தந்திருக்கிறோம். உங்களுடைய தனிப்பட்ட நிலைமைக்கேற்ப சட்ட ஆலோசனையை நீங்கள் பெறவேண்டும்.**

**இது ஓர் ஆங்கில மூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஒருவேளை முரண்பட்டிருந்தால், ஆங்கில பதிப்பைப் பார்க்கவும்.**

## உதவி பெறுவது எப்படி

**211 Ontario (211 ஒன்டாரியோ)** என்பது பல மொழிகளில் உதவி செய்யும் தகவல் மற்றும் பரிந்துரைக்கான ஒரு இலவச எண்ணாகும். இவர்கள் ஒரு நாளுக்கு 24 மணிநேரமும், ஒரு வாரத்திற்கு 7 நாட்களும் அழைப்புகளை ஏற்பார்கள். இவர்களால் பின்வருபவற்றுக்கு பதில்களை அளிக்க முடியும்:

- சட்ட உதவியை எங்கு பெறுவது, மற்றும்
- வேறு வகையான உதவிகளுக்குக் குடியேற்ற முகமை அல்லது சமுதாய முகமையை எவ்வாறு தொடர்பு கொள்வது.

ஓர் உள்ளூர் நூலகத்தை அல்லது ஒரு சமூக சட்ட உதவிக்களத்தைக் (legal clinic) கூட நீங்கள் தொடர்புகொள்ள முயற்சிக்கலாம்.

211 ஒன்ராறியோவைத் தொடர்பு கொள்ள:

☎ தொலைபேசி ....................... **211**
☎ கட்டணமற்ற தொலைபேசி....... **1-877-330-3213**
☎ செவிப்புலனற்றோருக்கான தொலைபேசி ............ **1-888-340-1001**
💻 **211Ontario.ca**

உங்களுக்கான சட்ட உதவிக்களத்தைக் கண்டறிய, ஒன்ராறியோச் சட்ட உதவி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்:

☎ கட்டணமற்ற தொலைபேசி ...... **1-800-668-8258**
☎ செவிப்புலனற்றோருக்கான தொலைபேசி ....................... **711**
💻 **legalaid.on.ca/legal-clinics**

10 அங்கத்துவ முகவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட CLEO (Community Legal Education Ontario / Éducation juridique communautaire Ontario) ஆறு மொழி ஆலோசனை குழுவுடன் சேர்ந்து, CLEO ஆல் இது தயாரிக்கப்பட்டது.
ஒன்ராறியோ ரிறிலியம் ஸ்தாபனமும் (Ontario Trillium Foundation) மற்றும் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனமும் (Legal Aid Ontario) இந்த திட்டத்திற்கு நிதி உதவி அளித்துள்ளன.
CLEO இன் **Steps to Justice** எனும் இணையத்தளத்தில் பொதுவான சட்டச் சிக்கல்கள் பற்றிய தகவல்கள் படிப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. **stepstojustice.ca** ஐப் பார்வையிடவும். இந்தப்பக்கங்களையும் மற்றும் வேறு சட்ட விபரங்களை தகவலிறக்கம் செய்வதற்கு **cleo.on.ca** இணையதளத்தை சென்று பார்க்கவும்.